International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 02 Issue: 03 July to August 2020 www.irjtsjournal.org

# மணிமேகலையின் காலம் குறித்த கருத்தாக்கங்கள்

முனைவர். செ. ரவிசங்கர்,

*உதவிப் பேராசிரியர்,*
*ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை –625021.*

**கட்டுரைச் சுருக்கம்**

பௌத்த சமயத்தின் தோற்றத்தையும் அதன் பின்பு அவை தமிழ்நாட்டில் பரவிய விதத்தையும், அதன் காலத்தையும் தெரிந்து கொண்டால் மணிமேகலையின் காலத்தை தெரிந்து கொள்ள முடியும். மணிமேகலையை ஆராய்ந்தால் தொல்காப்பிய காலத்திற்குப் பின்பு தோன்றியது என்று எண்ணமுடிகிறது. 'கயவாகு' என்னும் மன்னன் வரலாற்றை வைத்துக் கொண்டு மணிமேகலையின் காலத்தை அளவிடுகிறார். இவர் தருகின்ற சான்றானது "சாத்தனார்" வாய்மொழியால் கண்ணகியின் சிறப்பறிந்த செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் கட்டி வழிபட்டதற்கும், அதற்கு இலங்கை அரசனான கயவாகு மன்னன் வந்திருந்தான் என்பதற்கும் சிலப்பதிகாரமே சான்று என்பதை அறியமுடிகிறது. கிருதகோடி ஆசிரியரைக் குறிப்பிடுகின்ற மணிமேகலை, அவ்வரை பெரிதும் வழக்கிலிருந்த கி.பி.முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்று மா.இராசமாணிக்கனார் மேற்கோள்காட்டி மணிமேகலை இரண்டாம் நூற்றாண்டில் தோன்றியது என்பதை இதன் வழி அறியமுடிகிறது. மணிமேகலை நூல் கி.பி.9-ம் நூற்றாண்டிற்கும் பிற்பட்டமை அறியப்படும் என்று உதயணனின் வடமொழிக் கதையைக் கொண்டு விளக்குகிறார். பிற அறிஞர்கள் பல கருத்தை முன் வைத்தாலும் மணிமேகலை பௌத்தம் தமிழ்நாட்டில் உயர்வான மதிப்புடையதாக இருந்த காலத்தில் இயற்றப்பட்டிருக்க வேண்டும். அந்த வகையில் இன்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிற இரண்டாம் நூற்றாண்டு தான் மணிமேகலை இயற்றப்பட்ட காலமாக இருக்க முடியும் என்பதை அறியமுடிகிறது.

**முன்னுரை**

தமிழில் இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கப் பெறும் சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும் ஒன்றன் தொடர்ச்சியாகப் படைக்கப்பட்ட காப்பியங்கள் ஆகும். ஆனால் சிலப்பதிகாரம் சமண சமயத்தைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளது. மணிமேகலை பௌத்த சமயத்தைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளது. ஆனால் இரண்டும் ஒன்றன் தொடர்ச்சியான கதையமைப்பினைக் கொண்டுள்ளது. இக்காப்பியங்களின் கதையமைப்பினைக் கொண்டு பார்க்கும் போது சிலப்பதிகாரத்திற்கு அடுத்து மணிமேகலைக் காப்பியம் இயற்றப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. அந்த வகையில் காப்பியங்களின் காலம் என்ன என்பதையும், குறிப்பாக மணிமேகலையின் காலம் என்ன என்பதையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

**ஐம்பெருங் காப்பியங்களும் மணிமேகலையும்**

தமிழில் ஐம்பெருங்காப்பியம் என்னும் சொல்லாட்சியை முதன் முதலில் நன்னூல் உரையாசிரியர் மயிலை நாதர் கூறுகிறார். இதனைப் பற்றி அறிஞர்கள் கருத்துரைக்கும் போது, நூற்றொகைகள் பலவற்றைப் பற்றிக் கூறும் பேராசிரியர் இதைப் பற்றிக் கூறவில்லை. எனவே இந்தப் பாகுபாடு பேராசிரியர் காலத்துக்கும் மயிலைநாதர் காலத்துக்கும் இடையே தோன்றியிருக்கக் கூடும். என்கின்றனர், மேலும் ஐம்பெருங்காப்பியம் என்னும் சொல் மரபு வடமொழியில் இருந்து வந்திருக்க வேண்டும் என்கின்றனர். காரணம் வடமொழியில் காப்பியங்களைப் பாகுபடுத்தும் முறை வழக்கிலிருந்தது

ஶ்ரீஹா்ஷ கவி இயற்றிய நைஷதம், பாரவி இயற்றிய கிராதாா்ஜீனியம், காளிதாசா் இயற்றிய ரகுவம்சம், குமாரசம்பவம், கவிமாறன் இயற்றிய சிசுபாலவதம் ஆகிய ஐந்தும் வடமொழியில் பஞ்ச காவியங்கள் என்று அழைக்கப் படுகின்றன.

இம்முறையைப் பின்பற்றி தமிழிலும் ஐம்பெருங்காப்பியங்கள் என்ற பழக்கம் வந்திருப்பதாக காப்பிய ஆராய்ச்சியாளா்கள் கருதுகின்றனா்.

**ஐம்பெருங்காப்பியங்களும் வைப்பு முறையும்:-**

ஐம்பெருங்காப்பியங்கள் எனப்படுபவை: சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி இவை அனைவரும் அறிந்த செய்தி, காரணம் தமிழில் தோன்றிய காப்பியம் சிலப்பதிகாரம் என்பது பலரது கருத்து. ஆனால் ஐம்பெருங்காப்பிய வைப்பு முறையைப் பற்றிக் குறிப்பிடுகினற நூல்களைப் பற்றிக் குறிப்பிடுகிற கோவிந்தன் ‘ஐம்பெரும் காப்பியங்களின் முறை வைப்பு ‘பொருட்தொகை நிகண்டிலு திருத்தணிகை உலாவிலும் ஓரே போன்று காணப்படுகின்றது. சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்றே இறு நூற்களிலும் நூன்முறை வைப்பு காணப்படுகிறது. இதனால் தமிழ்க் காப்பியங்களுள் சிந்தாமணியே முதல் காப்பியம் என்பது அன்னாரது கொள்கை என்பது தெரிகிறது.

இவரது கொள்கையைப் பின்பற்றி வைசியப் புராணத்தை இயற்றிய சூடாமணி புலவரும் முதற்காப்பியமாக சிந்தாமணியையே கொண்டிருப்பதாகத் தெரிகிறது. டாக்டா்.உ.வே.சாமிநாத ஐயா் அவா்களும் முதன் முதலில் 1887-இல் சிந்தாமணியைப் பதிப்பித்த போது அதன் முகவுரையில் ஐந்து காப்பியங்களின் வரிசையை தாம் உணா்ந்தவாறு சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி என்று வரிசைப் படுத்துகிறாா்.’ என்று கூறுகிறாா். இதில் இருந்து ஐம்பெருங் காப்பியங்களின் வரிசையில் சிந்தாமணி ஏன் முன்னால் வைத்தாா்கள் என்பது ஆராய்ச்சிக்கு உரியது.

இந்த அடிப்படையில் மணிமேகலை ஐம்பெருங் காப்பியங்களின் வரிசையில் மூன்றாவதாகத அமைந்துள்ளது. ஆனால் இவை வழக்கில் மணிமேகலை சிலப்பதிகாரத்திற்கு அடுத்ததாக வைத்துக் கூறப்படுகிறது. இதனைத் தொடா்ந்து சீவக சிந்தாமணியும், வளையாபதி, குண்டலகேசி போன்ற காப்பியங்கள் இடம் பெறுகின்றன. இவ்வாறாக ஐம்பெருங் காப்பியங்களின் வைப்பு முறை மிகச் சிக்கலான முறையில் குழப்பத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

**பௌத்தமும் மணிமேகலையும்:**

தமிழ்நாட்டில் சமயங்களின் பின்புலத்தில் காப்பியங்கள் தோன்றியுள்ளன என்பது அனைவராலும் அறியப்பட்ட கருத்தாகும். சமண சமயத்தின் செல்வாக்கினால் சீவக சிந்தாமணி உருவானது. அதன் பின்னா் சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது. அதன் பின்பு பௌத்த மதத்தின் கருத்துக்களை மையப்படுத்தும் விதமாக மணிமேகலை இயற்றப்பட்டது, என்பதை பல வரலாற்று நூல்கள் எடுத்து இயம்புகின்றன.

பௌத்த சமயத்தின் தோற்றத்தையும் அதன் பின்பு அவை தமிழ்நாட்டில் பரவிய விதத்தையும், அதன் காலத்தையும் தெரிந்து கொண்டால் மணிமேகலையின் காலத்தை தெரிந்து கொள்ள முடியும்.

பௌத்த மதம் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வடநாட்டில் தோன்றியது. ஆனால் தொல்காப்பியம் தமிழில் கிடைத்த முதல் நூல். அந்நூலில் பௌத்த சமயம் பற்றிய குறிப்பு காணமுடியவில்லை. எனவே தொல்காப்பியத்திற்குப் பின்னா் பௌத்த சமயம் தமிழ் நாட்டில் தோன்றியிருக்க வேண்டும் ‘இக்கருத்தினை வரதராஜ ஐயா் கூற்றின் வழி அறிய முடிகிறது’

“அளவிற் கோடல் அந்தணர் மறைத்தே”(தொல் எழுத்து பிறப்பு 20)

“மறை மொழி கிளந்த மந்திரத் தான”(தொல் - சொல் - 166)

என்ற பகுதிகள் கொண்டு தொல்காப்பியர் நான்மறைகளைப் போற்றி நின்றமை உணரலாகும். மேற்கூறியன கொண்டு தொல்காப்பியனார் வைதீக சமயத்தவர் என்றும், பௌத்த சமயக் கொள்கைகள் அந்நூற்கண் யாண்டும் இடம் பெறற்கில்லை யென்றும் அறியலாம். மேலும், பௌத்த சமயம் தென்றமிழ் நாட்டிற் பரவத் தொடங்கியதே. தொல்காப்பியனார் காலத்துக்கு முந்நூறு ஆண்டுகட்குப் பின்னர் என்ப”[1] என்கிறார்.இந்த அடிப்படையில் மணிமேகலையை ஆராய்ந்தால் தொல்காப்பிய காலத்திற்குப் பின்பு தோன்றியது என்று அரிதியிட்டுக் கூறலாம்.

**மணிமேகலை இயற்றப்பட்ட காலம்:-**

மணிமேகலை நூலை இயற்றிய காலம் பற்றி பல்வேறான கருத்துக்கள் நிலவுகின்றன. மணிமேகலையின் காலத்தைப் பற்றிக் கூறும் மா. இராசமாணிக்கனார்,மணிமேகலை ஆசிரியரான சாத்தனாரும் சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோ அடிகளும் நண்பர்கள் என்பதும் செங்குட்டுவன் காலத்தவர் என்பதும் இவ்விரு நூல் பாயிரங்களாலும் சிலப்பதிகார அகச் சான்றுகளாலும் அறியலாம். என்கிறார் ஆனால் இவர் எந்த காலம் என்று கூறவில்லை அதற்குப் பதிலாக இவர் ‘கயவாகு’ என்னும் மன்னன் வரலாற்றை வைத்துக் கொண்டு மணிமேகலையின் காலத்தை அளவிடுகிறார். இவர் தருகின்ற சான்றானது “சாத்தனார்” வாய்மொழியால் கண்ணகியின் சிறப்பறிந்த செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் கட்டி வழிபட்டதற்கும், அதற்கு இலங்கை அரசனான கயவாகு மன்னன் வந்திருந்தான் என்பதற்கும் சிலப்பதிகாரமே சான்று பகிர்கிறது.

‘கயவாகு’ என்னும் பெயருடைய அரசர் இருவர் முறையே கி.பி.இரண்டாம் நூற்றாண்டிலும் கி.பி. 12 நூற்றாண்டிலும் ஆண்டனர் என்று இலங்கை வரலாறு கூறுகின்றது. இவற்றுள் கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் ஆண்ட கயவாகுவே செங்குட்டுவன் காலத்து அரசனாதல் வேண்டும் என்பதை ஆராய்ச்சியாளர் அனைவரும் ஒப்புகின்றனர். அவனே பத்தினி விழாவில் கலந்து கொண்டு தன் நாட்டிலும் பத்தினிக்கு கோயில் கட்டியவன் ஆவான். இன்றைக்கும் ‘சிங்களவர் பத்தினி தெய்யோ’ என்று கண்ணகியைக் கொண்டாடுகின்றனர். இலங்கையிலிருந்து தான் பத்தினியின் உருவச் சிலை லண்டன் பொருட்காட்சிச் சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.”[2] என்கின்றார் இத்தன்மை உண்மையானதாக இருக்குமா? என்று ஏற்றுக் கொண்டால்

மணிமேகலை நூலை ஆராய்ச்சி செய்த செல்லன் கோவிந்தனின் கருத்தும் கவனிக்கத்தக்கதாக அமைந்துள்ளது. அதாவது ‘சிலப்பதிகாரத்தின் 30-வது காதையில் வரும் ‘கயவாகு’ எனும் பெயர் இளங்கோவடிகள் எழுதியதன்ற. மாறாக கி.பி.12 நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த ஒரு தமிழ் புலவன் அவன் காலத்தில் இலங்கையை ஆண்ட இரண்டாம் கயவாகு மன்னனுக்கு பெருமை தேடித்தர விரும்பி இளங்கோவடிகள் எழுதிய

“கடல் சூழிலங்கைக் காவல் வேந்தனும்” என்னும் அடியில் உள்ளக் ‘காவல்’ என்னும் சொல்லை நீக்கிவிட்டுக் ‘கயவாகு’ என்னும் பெயரைச் செருகினார். ஆகவே அவர் எழுதிய சிலப்பதிகார ஏட்டுச் சுவடியில்

**குடகக் கொங்கரும் ஆளவ வேந்தனும்**
**கடல் சூழிலங்கைக் கயவாகு வேந்தனும்**

என்று இருந்தது. இப்புலவர் படியெடுத்த சுவடியைப் படியெடுத்தவர் சுவடிகளிலெல்லாம் ‘கயவாகு’ என்னும் பெயர் காணலாயிற்று; ஆனால் இவர் படியெடுத்த மூலச் சுவடியைப் படியெடுத்துவர் ஏடுகளிலெல்லாம்,‘காவல் வேந்தன்’ என்ற தொடரே காணப்பட்டது. இதனால் சிலப்பதிகார காப்பியத்தின் காலத்தை ஆராய்ந்த

பி.டி.சீனிவாச அய்யங்கார் தாம் எழுதிய தமிழர் சரிதம் என்னும் ஆங்கில நூலில் அன்றே 1929-ல் கயவாகு எனும் பெயர் இடைச் செருகல்; அதனால் அச்சொல்லை ஆதாரமாகக் காட்டிச் சிலப்பதிகாரத்தை இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த நூல் என்ற சொல்ல முடியாது என்று எழுதினார்'' என்கிறார்.

இந்தக் கருத்தைக் காணும் போது மா.ராசமாணிக்கனாரின் கருத்தை ஏற்றுக் கொள்வதா? கோவிந்தனின் கருத்தை ஏற்றுக் கொள்வதா? என்று தெரியவில்லை. ஆனால் ஒரு முடிவுக்கு வரலாம். 'கயவாகு' என்னும் சொல்லை வைத்துக் கொண்டு சிலப்பதிகார காப்பியத்தையும் மணிமேகலையின் காலத்தையும் எந்த நூற்றாண்டு என்று கூறிவிட முடியாது.

இது தவிர இருக்கின்ற சான்றுகளை நாம் பார்க்க வேண்டும். மணிமேகலையின் காலம் பற்றி கூறும் இராசமாணிக்கனார் அகச்சான்று தருகிறார். ''மணிமேகலை 27 ஆம் காதையில் கிருதகோடி' என்னும் பெயர் வேதவியாசருடனும் சைமினி என்னும் ஆசிரியருடனும் பிரமாணங்கள் கூறுமிடத்தில் குறிக்கப் பட்டுள்ளது. கிருதகோடி என்பது மீமாம்சை சாத்திரமாகிய வேதாந்த சூத்திரத்திற்குப் போதாயனர் இயற்றிய உரை ஆகும் என்பது பிரபஞ்ச ஹிருதயம் என்னும் வடமொழி நூலில் கூறப்பட்டுள்ளது. அந்நூலில், இவ்வுரை மிக விரிவாக இருந்தது பற்றி உபவர்ஷர் என்பவர் அதனைச் சுருக்கி அமைத்தனர் என்பது குறிக்கப்பட்டுள்ளது. இந்த உபவர்ஷர் கி.மு.3-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர் என்பது ஆராய்ச்சியாளர் முடிவு. எனவே அவருக்கும் முற்பட்ட கிருதகோடி உரை எழுதிய போதாயனர் அவருக்கும் முட்பட்டவர்; ஏறத்தாழ கி.பி.முதல் நூற்றாண்டின் அல்லது இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர் ஆவர் என்று அறிஞர் இருக்கின்றனர்,இதனால் கிருதகோடி ஆசிரியரைக் குறிப்பிடுகின்ற மணிமேகலை, அவ்வரை பெரிதும் வழக்கிலிருந்த கி.பி.முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்று கருத இடமுண்டு என்பர்[3] மா.இராசமாணிக்கனார் மேற்கோள்காட்டி மணிமேகலை இரண்டாம் நூற்றாண்டில் தோன்றியது என்கிறார். இக்கருத்தை ஏற்றுக்கொள்ளலாம் இது ஒருவகையில் அனுமானமாகத் தோன்றினாலும், இங்குக் கூறப்பட்டுள்ள கருத்து ஏற்புடையதாக உள்ளது.

பொதுவாக இலக்கியங்களில் சமுதாயத்தில் வழக்கில் இருக்கின்ற நிகழ்வுகளைப் பதிவு செய்யும் வழக்கம் தற்போதும் உள்ளது. குறிப்பாக இன்றையச் சூழலில் தனிமனிதம் போற்றப்படுகிற பண்புகளை நவீன இலக்கியங்களில் காணமுடிகிறது. அது நடைமுறையிலும் இருந்து வருகிறது. அதுபோல மணிமேகலை இயற்றப்பட்ட காலத்தில் இருந்த அதாவது பெரிதும் வழக்கில் இருந்த கிருத கோடியின் உரையைப் பற்றி சாத்தனார் தெரிந்ததால் இதனை தமது நூலில் எழுதியுள்ளார். எனவே மாணிக்கனாரின் கருத்து ஏற்புடையது.

அடுத்ததாக சான்று தேட முற்படும் போது பௌத்தக் கொள்கைகளை ஆராய வேண்டும். பொதுவாகப் பௌத்தத்தைப் பின்பற்றுபவர்களை நான்கு வகையாகப் பிரிப்பர். அவர்கள்,

1. சௌத்திராந்திகர்
2. வைபாடிகர்
3. மாத்தியமிகர்
4. யோகசாரர்

இவர்களை வைத்து பௌத்தக் கொள்கைகளை இரண்டாகப் பிரித்துள்ளனர்.

1. மகாயான பௌத்தக் கொள்கை
2. ஈனயான பௌத்தக் கொள்கை

இந்த இரண்டும் முக்கியமான கொள்கைகள். 'மணிமேகலையில் 29 காதையிலும், பிற காதைகளிலும் குறிப்பிட்டுள்ள பௌத்த சமயக் கொள்கைகள், ஏறத்தாழக் கி.பி.200-250 ஆண்டுகட்கு இடைப்பட்ட காலத்தில்

வாழ்ந்தவராக ஆராய்ச்சியாளரால் துணியப்படும் 'நாகார்ச்சுனர்' என்பவரால் உண்டாக்கப்பட்ட மகாயான பௌத்தமதக் கொள்கைகள் அல்ல, மாறாக அவையெல்லாம் ஈனயான பௌத்தமதக் கொள்கைகள். எனவே மணிமேகலை காலத்தில் இருந்த தமிழகத்துப் பௌத்தம் ஈனயானத்தைச் சார்ந்த சௌத்ராந்திகப் பிரிவினது என்பது தெளிவாகும் என்பர் B.C.Law Buddhistic studies' commiced, இதனை மாணிக்கனார் கூறிவிட்டு ஆகையால் நாகார்ச்சுனர் கொள்கைகள் தமிழகத்தில் பரவுவதற்கு முற்பட்ட காலத்தது மணிமேகலை என்று கருதுதல் பொருந்தும் என்கிறார்.

இதனடிப்படையில் பார்த்தால் மிகத் தெளிவாக மணிமேகலை இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய காப்பியம் என்பது தெளிவாகிறது. இவ்வாறாகக் காப்பிய ஆராய்ச்சியை மிக நேர்த்தியாக நடுவுநிலையில்ஆராய்ந்துள்ள அறிஞர்களின் கூற்றுப்படி மணிமேகலையை காணும்போது இன்னும் சில சான்றுகளையும் பார்க்க முடிகிறது.

பௌத்த சமயத்துச் 'சாத்திய சித்தி' பிரிவினரான அர்வர்மர் ஏறக்குறைய கி.பி.250 இல் வெளிப்படுத்திய அநாத்மவாதக் கொள்கை மணிமேகலையில் இல்லை என்கிறார். அய்யங்கார் தமது Manimekalai in its Historical Setting என்னும் நூலில். இதனை தகுந்த சான்றாக வைத்துக் கொண்டால் மணிமேகலை கி.பி.250 களுக்கு முன்னால் எழுதப்பட்டது என்னும் கருத்தினை ஆய்வாளர் இராசமாணிக்கனார் முடிந்த முடிவாகக் கூறுகிறார். மேலும் இவர் மணிமேகலையையும் சிலப்பதிகாரத்தையும் கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் செய்யப்பட்டன என்று கூறுகிறார்.ஆனால் செல்லன் கோவிந்தன் கூற்றின் வழி அதாவது 'சாத்தனார் ஹர்ஷனின் பிரியதர்சிகாவைப் படித்துத்தான் மணிமேகலையில் அவ்வாறு கூறினானர். பாஸன் எழுதிய 'பிரதிக்ஞா யௌகந்தராயனியிலாகட்டும் குணாட்டியருடைய பிருகத்கதையிலாகட்டும் அதன் வடமொழிப் பெயர்ப்பான துர்விநீத கங்கனின் பிருகத்கதையிலாகட்டும். இந்நிகழ்ச்சி கூறப்படவில்லை என்பது அறியத்தக்கதாகும். ஆகவே சாத்தனார் ஹர்ஷனின் பிரியதர்காவைப் படித்துத்தான் இதை (மணிமேகலையை) எழுதினார் என்பது தேற்றம். இதனால் மணிமேகலை நூல் கி.பி.9-ம் நூற்றாண்டிற்கும் பிற்பட்மை அறியப்படும் என்று உதயணனின் வடமொழிக் கதையைக் கொண்டு விளக்குகிறார்.

இதனை ஏற்றுக்கொள்ள முடியுமா எனத் தெரியவில்லை இது மீண்டும் ஆராய்வதற்குரியது காரணம் செல்லன் கோவிந்தன் வையாபுரிபிள்ளையின் மீது மிகுந்தப் பற்றுள்ளவர் ஆவர். எனவே அவரைப் பின்பற்றி கால ஆராய்ச்சி செய்கின்றார். வையாபுரிப்பிள்ளை கால ஆராய்ச்சியில் மிகப் பெரிய பிழைகள் செய்துள்ளார் என்பது யாவரும் அறிந்ததே. எனவே அதனை அடியொற்றி இவர் ஆராய்ந்துள்ளதால் இந்த அணுகுமுறையை ஏற்றுக்கொள்ள முடியாது.

மேலும் மணிமேகலை 7-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டது என்றால் 7,8-ஆம் நூற்றாண்டுகளில் பௌத்தம் வீழ்ச்சியை நோக்கிப் பயணப்பட்டது, காரணம் "பிராமணர்கள் மேற்கொண்ட வேள்விச் சடங்குகளை வெறுத்திகழ்ந்த அவைதீக மதமாகிய பௌத்தம் தமிழ் நாட்டில் வேரூன்ற முடியவில்லை.

கி.பி.7,8-ஆம் நூற்றாண்டுகளில் சமணரின் ஆதிக்கம் ஓங்கவே பௌத்தம் நிலை குலைந்தது. என்கிறார் வரதராஜ ஐயர். இந்த சூழ்நிலையில் பௌத்தத்தில் காப்பியம் இயற்றியிருக்க முடியாது. எப்போது மதத்திற்கான செல்வாக்கு மிகுதியாக இருக்குமோ அப்போது தான் அம்மதம் இலக்கியங்களை உருவாக்கும். அந்த அடிப்படையில் மணிமேகலை பௌத்தம் தமிழ்நாட்டில் உயர்வான மதிப்புடையதாக இருந்த காலத்தில் இயற்றப்பட்டிருக்க வேண்டும். அந்த வகையில் இன்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிற இரண்டாம் நூற்றாண்டு தான் மணிமேகலை இயற்றப்பட்ட காலமாக இருக்க முடியும்.

**சிலப்பதிகாரம் மணிமேகலை**

தமிழில் இரண்டு காப்பியங்களும் மிகுந்த உறவுடைய நெருங்கிய காப்பியங்கள் ஆகும். சிலப்பதிகாரம் இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்றால், மணிமேகலையும் இரண்டாம் நூற்றாண்டாகத்தான் இருக்க வேண்டும். காரணம் இரண்டு நூல்களுக்குமான ஒற்றுமைகள் மிகுதியாக உள்ளன.

1. வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசும்
   கச்சையானைப் பிடர்த்தலை யேற்றி மணி-27-28 சிலம்பு இந்திர 141-1.

2. நுதல்விழி நாட்டத் திறையோன்மணி-1, 54; சிலம்பு ஊகாண் காதை-7

3. பசியும் பிணியும் பகையும் நீங்கி
   வசியும் வளனும் சுரக்கென வாழ்த்திமணி-1,70 சிலம்பு-இந்தி-72

4. அரும்பெறல் மாமணி யோங்குதிரைப்
   பெருங்கடல் வீழ்த்தோர் போன்றுமணி-2, 72 சிலம்பு-வரந்தரு-29-30
5. தாரன் மாலையன் தமனியப் பூமனினன்
   பாரோர் காணாப் பலர்தொழு பழமையன்மணி-36-37 சிலம்பு அடை-157-58

6. பன்மலர் அடுக்கிய நன்மரப் பந்தர்
   இலவந் திகையின் எயிற்புறம் போகிமணி-3, 44-45 சிலம்பு நாடு-30-37

இவ்வாறாக பல அடிகள் இரண்டு நூல்களிலும் ஒற்றுமையாக அமைந்துள்ளன. எனவே இரண்டும் ஒரே காலத்தைச் சார்ந்த நூல்கள் என்பதை அறிய முடிகிறது.

**முடிவுரை**

மணிமேகலை கால ஆராய்ச்சியில் பலரும் பலவிதமான கருத்துக்களைக் கூறியுள்ளனர். தமிழ்நாட்டில் பௌத்த சமயச் செல்வாக்கையும், அதன் கொள்கைகளையும் கொண்டு மணிமேகலையை ஆராய்ந்தவர்கள் கி.பி.2 ஆம் நூற்றாண்டு என்று கூறுகின்றனர். அந்த வகையில் மணிமேகலையின் காலம் கி.பி.2 ஆம் நூற்றாண்டு என இக்கட்டுரை ஆராய்ந்துள்ளது.பௌத்த சமயத்தின் தோற்றத்தையும் அதன் பின்பு அவை தமிழ்நாட்டில் பரவிய விதத்தையும், அதன் காலத்தையும் தெரிந்து கொண்டால் மணிமேகலையின் காலத்தை தெரிந்து கொள்ள முடியும். மணிமேகலையை ஆராய்ந்தால் தொல்காப்பிய காலத்திற்குப் பின்பு தோன்றியது என்று எண்ணமுடிகிறது. ‘கயவாகு’ என்னும் மன்னன் வரலாற்றை வைத்துக் கொண்டு மணிமேகலையின் காலத்தை அளவிடுகிறார். இவர் தருகின்ற சான்றானது ‘‘சாத்தனார்’’ வாய்மொழியால் கண்ணகியின் சிறப்பறிந்த செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் கட்டி வழிபட்டதற்கும், அதற்கு இலங்கை அரசனான கயவாகு மன்னன் வந்திருந்தான் என்பதற்கும் சிலப்பதிகாரமே சான்று என்பதை அறியமுடிகிறது. கிருதகோடி ஆசிரியரைக் குறிப்பிடுகின்ற மணிமேகலை, அவ்வரை பெரிதும் வழக்கிலிருந்த கி.பி.முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்று மா.இராசமாணிக்கனார் மேற்கோள்காட்டி மணிமேகலை இரண்டாம் நூற்றாண்டில் தோன்றியது என்பதை இதன் வழி அறியமுடிகிறது. மணிமேகலை நூல் கி.பி.9-ம் நூற்றாண்டிற்கும் பிற்பட்டமை அறியப்படும் என்று உதயணனின் வடமொழிக் கதையைக் கொண்டு விளக்குகிறார். பிற அறிஞர்கள் பல கருத்தை முன் வைத்தாலும் மணிமேகலை பௌத்தம் தமிழ்நாட்டில் உயர்வான மதிப்புடையதாக இருந்த காலத்தில் இயற்றப்பட்டிருக்க வேண்டும். அந்த வகையில் இன்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிற இரண்டாம் நூற்றாண்டு தான் மணிமேகலை இயற்றப்பட்ட காலமாக இருக்க முடியும் என்பதை அறியமுடிகிறது.

**பயன்பட்ட நூல்கள்**

[1] A History of Tamil Literature 1-1100 AD

[2] தமிழ் மொழி இலக்கிய வரலாறு

[3] S.K.Ayyangar Manimekalai in its Historical Setting p.61-67'

[4] தமிழர் சரிதம்

[5] Manimekalai in its Historical Setting